



தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் அதிகமாக உற்பத்தி ஆகும் காற்று மற்றும் சூரிய ஒளி மின்சாரத்தை மின் தேவை அதிகமுள்ள மேற்கு மற்றும் சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லும் வகையில் விருதுநகரில் 765/400 கி.வோ. திறனுள்ள துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. முதற்கட்டமாக, இத்துணைமின் நிலையத்திற்கு 935 மின்சாரம் கொண்டு வரும் இரு 400 கி.வோ. மின்பாதைகள் கயத்தாறு மற்றும் தென்னம்பட்டி 400 கி.வோ. துணை மின் நிலையங்களில் இருந்து அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரு மின்பாதைகளுக்கான மின்னூட்டிகள் 21.09.2024 அன்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மின் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மின் வாரிய இயக்குநர்கள் .அ.ரா.மாஸ்கர்னஸ், திருமதி.எஸ்.லஷ்மி மற்றும் அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## செஸ் ஒலிம்பியாட்:

# இந்திய ஆண்கள் - பெண்கள் அணி தங்கம் வென்று சாதனை!

புடாபெஸ்ட், செப்.24

45வது செஸ் ஒலிம்பியாட் போட்டி ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடந்து வருகிறது. இதில் இன்று நடைபெற்ற இறுதி சுற்றில் இந்திய ஆண்கள் அணி ஸ்லோவோனியாவை எதிர்கொண்டது. இதில் இந்தியா தரப்பில் குகேஷ் மற்றும் அர்ஜூன் ஆகியோர் வெற்றி பெற்றனர். இதன் மூலம் இந்திய ஆண்கள் அணி செஸ் ஒலிம்பியாட் வரலாற்றில் முதல் முறையாக தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

ஸ்ரீநாத் நாராயணன், குகேஷ், பிரக்ஞானந்தா, அர்ஜூன் எரிகைசி, விதித் மற்றும் பெண்டாலா ஆகியோர் அடங்கிய இந்திய ஆண்கள் அணி தங்கப்பதக்கம் வென்று அசத்தியுள்ளது. இதேபோல் இந்த தொடர் முழுவதுமே சிறப்பாக விளையாடி வந்த அபிஜித் தலைமையிலான இந்திய மகளிர் அணி இறுதிச்சுற்று ஆட்டத்தில் அஜர்பைஜானுக்கு எதிராக விளையாடியது. இதில் திவ்யா, வந்திகா மற்றும் ஹரிகா ஆகியோர் வெற்றி பெற்று இந்திய அணி தங்கப்பதக்கம் வெல்ல உதவினர்.

திவ்யா, வந்திகா, ஹரிகா, தானியா மற்றும் அபிஜித் (கேப்டன்) ஆகியோர் அடங்கிய இந்திய மகளிர் அணி தங்கப்பதக்கம் வென்று அசத்தியுள்ளது. வரலாற்றில் முதல் முறையாக இந்திய மகளிர் அணியும் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளது.



திருப்பூர் தி.மு.க. தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் உடுமலைப்பேட்டை, சாமராயன்பட்டியில் மாநில அளவிலான ரேக்ளா பந்தயப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச்செயலாளர், தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்று ரேக்ளா வண்டியில் பயணம் செய்தார்.

## நீலகிரி மாவட்டத்தில்

# பல்வேறு துறைகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது!

நீலகிரி, செப். 24-

நீலகிரி மாவட்டம், உதகை, தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், மகளிர் திட்டம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, மீன்வளத்துறை, பட்டு வளர்ச்சித் துறை, தாட்கோ மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து துறைச்சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் 21.09.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் அறிவித்த திட்டங்களின் தற்போதை நிலை மற்றும் முன்னேற்றம் குறித்தும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மக்களை தேடி மருத்துவத் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், கண்ணொளி காப்போம் திட்டம், ராஷ்டிரிய



பால் ஸ்வஸ்திய காரியக்ரம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், நடமாடும் மருத்துவ சேவை, இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம், முதலமைச்சரின் புதிய மருத்துவ காப்பீடு திட்டம் குறித்தும், மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான வங்கி கடன் இணைப்பு, பண்ணை சார்ந்த வாழ்வாதார திட்டங்கள், தீனதயாள் உபாத்தியா கிராமின் யோனா, இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் சுய உதவிக்குழுக்களுக்கான திட்டங்கள் குறித்தும்,

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில், நலிந்த நிலையில் உள்ள தலைசிறந்த முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்ட விவரங்கள், முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் குறித்தும், மீன்வளத்துறை சார்பில், மாவட்டத்திலுள்ள உயர்மட்ட குளிர்ந்த நீர்நிலைகளில் பரவும் மீன் குஞ்சுகள் இருப்பு செய்தல் குறித்தும், பட்டு வளர்ச்சித் துறை சார்பில், குன்னூர் அரசு விதைப்பண்ணை யில் ஒருங்கிணைந்த பட்டு வளர்ச்சி மற்றும் சுற்றுலா மையம் தொடர்பாகவும், தாட்கோ மூலம் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டுத்திட்டம், தொழில் முனைவோர் திட்டம், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் புறக்கடை கோழி வளர்ப்பு திட்டம், புல்வளர்ப்புத்திட்டம், மின்சாரம் மூலம் இயங்கும் புல் நறுக்கும் இயந்திரம் உள்ளிட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர் இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி ஒவ்வொரு துறையின் வாயிலாக பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை அறிவித்து, அதனை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டங்க ளின் முன்னேற்றம் மற்றும் அரசு திட்டங்களின் பயன்கள் பொதுமக்களுக்கு சென்று சேர்க்கிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ள தெரிவித்ததன் அடிப்படையில், நமது மாவட்டத்தில் நேற்றைய தினம் ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் அரசின் முக்கிய அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, மகளிர் திட்டம், தாட்கோ உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு துறையின் சார்பாக நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், மாவட்ட அளவில் தீர்க்க முடியாத கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக என்னிடம் வழங்கும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட துறைச் சார்ந்த அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அதற்கான தீர்வு காண உரிய நடவடிக்கை மேற்கொள்ளபடும் எனவும், அரசின் திட்டங்கள் மக்களுக்கு உரிய நேரத்தில் சென்றடையும் வகையில் துறைச்சார்ந்த அலுவலர்கள் தங்களது பணிகளை மிகச் சிறப்பான முறையில் மேற்கொள்ள வேண்டும் எனவும், மக்களுக்கு சேவை ஆற்றுகின்றோம் என்று மனதில் நினைத்து தங்களது பணிகளை முழு ஈடுபாட்டுடன் மேற்கொள்ள வேண்டும் எனவும், அடுத்த ஆய்வுக் கூட்டத்திற்கு வருகை தரும்போது தற்போழுது வரை தொடங்கப்படாத பணிகளையும் தொடங்கி, நடைபெற்று வரும் பணிகளையும் விரைவில் முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, மகளிர் திட்ட இயக்குநர் காசிநாதன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திருமதி.கல்பனா, இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) (பொ) மரு.நாகபுஷ்பராணி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி, மீன் வளத்துறை உதவி இயக்குநர் திருமதி.ஜோதிலட்சுமி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் (பொ) திருமதி.இந்திரா, தாட்கோ பொது மேலாளர் சக்திவேல், பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் (பொ) திருமதி.திலகவதி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல துணை இயக்குநர் திருமூலம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. அயலக அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## அணியின் செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

DMK NRI WING

தி.மு.க. அயலக அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் அயலக அணித் தலைவர் - நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி தலைமையில் கோயம்பேடு ஜே.பி ஓட்டலில் நாளை (25.9.2024 - புதன்கிழமை) காலை 9 மணிக்கு நடைபெறுகிறது .

இக்கூட்டத்தில் கழக அயலக அணி இணை மற்றும் துணைச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**பொருள்: 1. கழக ஆக்கப் பணிகள்**

**2. கழகப் பவள விழா மற்றும்**

**முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா**

**3. 2026 சட்டமன்றத் தேர்தல்**

**எம்.எம்.அப்துல்லா எம்.பி.**

செயலாளர்

தி.மு.க. அயலக அணி



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவினை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம், வடமருதூர், முதலூர், ஆவிகொளப்பாக்கம் ஆகிய ஊராட்சிகள் மற்றும் ஒன்றியச் செயலாளர் மு.தங்கம் தலைமையில் அவரது இல்லம் ஆகிய இடங்களில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி கழகக் கொடியேற்றி ஆவிக்கொளப்பாக்கம் ஊராட்சியில் தி.மு.க. முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார். மேலும் மக்கள் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், டி.என்.முருகன், தயா.இளந்திரையன், டி.செல்வராஜ், ஒன்றியச் செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், கோபிகிருஷ்ணன், ராயல் எஸ் அன்பு, ராஜிவ்காந்தி, வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை.சுரேஷ், ப.அன்பரசு, பாலமுருகன், அரசு கூடுதல் வழக்கறிஞர் கார்த்திகேயன், அய்யப்பன், வெங்கடேசன் உள்ளிட்ட ஒன்றிய, நகர நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நிவேதா எம்.முருகன் தலைமை! ஏ.ஜி.ஜெ.பிரபாகர் வரவேற்புரை!

# சீர்காழி மேற்கு ஒன்றியத்தில் முப்பெரும் விழா பொதுக்கூட்டம்! திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை!

## குத்தாலம் பி.கல்யாணம், எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை. செப்.24

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் முப்பொரும் விழா பொதுக்கூட்டம் சீர்காழி சட்டநாதபுரம் ரவுண்டானாவில் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். சீர்காழி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஜி.ஜெ.பிரபாகரன் வரவேற்புரையாற்றினார்.

ஒன்றிய கழக நிர்வாகிகள் ஜி.வீரமணி, இரா.முருகன், கே.சசிக்குமார், கலைச்செல்வி தியாகராஜன், எச்.முகமது இத்ரீஸ், பி.அன்பழகன், சி.விஜய குமார், பூம்மகேந்திரன், ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர்கள் குண. தென்னராஜ், ஆர்.கே.பிரபாகரன், வி.விஜயராணி, சட்டநாதரபுரம் கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநதி கள் எஸ்.அன்பழகன், ஆர்.செல்வம், ஜெ.விசாகர், எஸ்.சங்கர், வி.பன்னீர், எஸ்.எஸ்.முத்துகுமார், ரா.சுப்ரமணியன், டி.அமுதாதிருநாவுக்கரசு, என்.கல்யாணசுந்தரம், சி. உதயக்குமார், ஜி.பாபு, சு.பன்னீர், பழ.முருகவேல், எம்.செல்வம், ஆர்.பழனிவேல், எஸ்.ஜீவா, எஸ்.சிலம்பரசன், பி.கார்த்தி, சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தலைவரும், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் திண்டுக்கல் ஐ. லியோனி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சீர்காழி ஒன்றியக் குழு தலைவர் கமலஜோதிதேவேந்திரன், தலைமைச்செயற்குழு உறுப்பினர்கள் இரா. இளங்கோவன், முத்து. மகேந்திரன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, பொருளாளர் மகா.அலெக்ஸ்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம. சுப்பராயன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பஞ்சு குமார், செல்லசேது.ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், என்.இளைய பொருமாள், மங்கை எம். சங்கர், ஞான.இமையநாதன், ப.முருகமணி, ஏ.ஆர். ராஜா, பி.எம்.அன்பழகன், அமிர்த.விஜயகுமார் வைத்தீஸ்வரன் கோயில் பேரூர் செயலாளர் என்.அன்புச்செழியன், அரசு வழக்கறிஞர் இரா.சேயோன், ஒன்றிய முன்னாள் செயலாளர் என்.சசிக்குமார், கொள்ளிடம் ஒன்றியக் குழு தலைவர் வி.ஜெயபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ.வின்சென்ட், சுபாநெடுஞ்செழி யன், எஸ்.சுவாமிநாதன், எம். பி.கென்னடி,

மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் காளி. தேசப்பன், இரா.முருகன், எம்.எஸ்.முத்துகுபேரன், ஆர்.தனராஜ், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினரும், முன்னாள் ஒன்றியக் குழு தலைவர் தியாக. விஜேஸ்வரன், முன்னாள் ஒன்றிய அவைத்தலைவர் எஸ்.அன்பழகன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எஸ்.ஆனந்தன், விஜயபாரதிகென்னடி, மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் பி. குலோத்துங்கன், ஜெ. ஜூபையர்அகமது, வி.என்னீர்செல்வம், கோ.பாலகிருஷ்ணன், எஸ். சுந்தரபாண்டியன், என்.அம்பலவாணன், மோகன.அருண்குமார், ராஜதுரை, எழிலரசன், எம்.ஆர்.ஆர்.ராஜசேகர், செந்தில், முத்துகுமார், ஆர்.திருச்செல்வம், சோ.ராமு, என்.இளையராஜா, எம்.பாரூக், வேல்சாமி, அமுல்ராஜ், ராஜேஷ், தனவள்ளிமுத்துகுமார், வெங்கடேசன், ஒன்றிய நிர்வாகிகள் நாகராஜன், இளவரசு, இராஜேந்திரன், சங்கர், கே.ராஜா, செந்தாமரைக் கண்ணன், சண்முகராஜா, ஸ்டாலின், முன்னாள் ஒன்றியக் குழு தலைவர் ரவி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் சட்டநாதபுரம் ஒன்றியக் குழு உறுப்பினர் எஸ்.எஸ். ஜெ.விசாகர் நன்றி கூறினார்.

# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக மாணவரணி அமைப்பாளர் தேர்வுக்கு நேர்காணல்!

நாமக்கல், செப். 24-

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி ஒன்றிய, நகர, பேரூர் பொறுப்பாளர்களுக்கான, நேர்காணல் நிகழ்ச்சியில் திரளான இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில், மாநில இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தல் படி, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், மாநில மாணவரணி செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான எழிலரசன் ஆகியோரின் ஆலோசனைப்படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுகவில் உள்ள ஒன்றிய, நகர மற்றும் டவுன் பஞ்சாயத்து திமுக மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்பிற்கான நேர்காணல், நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகமான கலைஞர் அரங்கம், பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது.

மாநில மாணவர் அணி இணை செயலாளர் மோகன், துணை செயலாளர்கள் தமிழரசன், பொன்ராஜ், கோகுல், ஆனந்த், தமிழ், அமுதரசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நேர்காணல் நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சத்தியசீலன் வரவேற்றார். நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, மேற்கு நகர செயலாளர் சிவக்குமார், புதுச்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.பி.கவுதம், புதுச்சத்திரம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயபிரகாஷ், மாவட்ட பொறியாளர் அணி ப.கிருபாகரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கலைவாணன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கவுதம், கடலரசன் கார்த்திக், சக்திவேல், மணிகண்டன், சங்கீதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக, மாணவர் அணியின் பொறுப்பிற்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் தனித்தனியாக அழைக்கப்பட்டு, நேர்காணல் நடத்தப்பட்டது. ஏராளமான இளைஞர்களும், இளம்பெண்களும் ஆர்வமுடன் நேர்காணல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.




நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பரமத்தி வேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் மற்றும் கல்லூரியில் தமிழ் மாணவர் மன்றம் அமைக்க ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம், திருச்செங்கோடு, வேலூர் ரோடு, தளபதியார் அரங்கில் மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், துணைச் செயலாளர்கள் சேலம்.ரா.தமிழரசன், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த் ஆகியோர்கள் முன்னிலையில் நேர்காணல் நடைபெற்றது. வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். நேர்காணலில் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பாலசுப்ரமணியம் துணை அமைப்பாளர்கள் ஐயப்பன் (எ) பெருமாள் தங்கமணி, ராகேஷ் கண்ணன், லாவண்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.